


- வாழ்வோம்

இலங்கைக்குக் கடத்துவதற்காக, ரூ.135 கோடி மதிப்பிலான மெத்தம்பெட்டமைன் பதுக்கிவைத்திருந்த நாகையைச் சேர்ந்த த.வெ.க. நிர்வாகி உள்பட, 4 பேரை மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் கைதுசெய்து, இன்றோடு 6 நாட்கள் ஆகிவிட்டன. ஆனால், போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழித்துவிடுவேன் என வீர வசனம் பேசிய முதலமைச்சர், இந்த நொடி வரை இச்சம்பவம் குறித்து வாய் திறக்கவில்லை. அமைச்சர்களும் முறையாகப் பதில் அளிக்கத் தயாராக இல்லை. பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினாலும் மடைமாற்றுவதையும், நழுவிச் செல்வதையும்தான் த.வெ.க. அமைச்சர்கள் செய்கிறார்கள்.

வாயைத் திறங்க சி.எம். சார்!

போதைப்பொருளைக் கடத்தத் திட்டமிட்ட இடமான நாகைத் துறைமுகம், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவ்வாரியம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின்கீழ் வருகிறது. அத்துறையின் அமைச்சராக உள்ள பொதுப்பணித் துறை அமைச்சருக்குத் தெரியாமல்தான் இத்தகைய சர்வதேச போதைப்பொருள் சம்பவங்கள் நடக்கின்றனவா? இந்த அரசு பெரிதாக விளம்பரப்படுத்திக் கொண்ட போதைப்பொருள் தடுப்பு அதிரடிப்படை முற்றிலுமாகச் செயலிழந்து விட்டதா? எனப் பல கேள்விகள் எழுந்திருக்கின்றன.

இந்தக் கேள்விகள் எதற்கும் பதில் சொல்லத் துணிவில்லாத இந்த ஆளுங்கட்சி த.வெ.க., பூபாலன் குறித்த செய்திகளை வெளியிடக் கூடாது எனப் பத்திரிகையாளர்களை மிரட்டிவருகிறது. பூபாலனைக் கட்சியில் இருந்து நீக்குவதாக அறிக்கை வெளியிட்ட த.வெ.க., நாகை நகரச் செயலாளர் பால்ராஜ், நீக்கப்பட்டவருக்காக வக்காலத்து வாங்கி, பத்திரிகையாளர்களை மிரட்டும் ஆடியோ வெளியாகி இருக்கிறது. பூபாலனை நீக்கியது வெறும் கண்துடைப்பு நடவடிக்கை என்பதை பால்ராஜின் மிரட்டல் உறுதிப்படுத்தியிருக்கிறது. அன்று, அமைச்சர் சரத்குமாரை விசாரித்திருந்தால்.. இன்று, பூபாலனுக்குத் துணிச்சல் வந்திருக்காது. ஆனால், இன்று பூபாலனையும் காப்பாற்ற பத்திரிகையாளர்களை மிரட்டுவது, இத்தகைய கொடுங்குற்றங்களில் ஈடுபடுவோருக்குத் துணிச்சலைத்தான் தரும்.

த.வெ.க. அரசு திருந்தவில்லை; திருந்துவதற்கான அறிகுறியும் தென்படவில்லை!

ஃப்ளாஷ்பேக்



தலைவரிடம் பெற்ற வாழ்த்து!



க.அழகுசுந்தரம்

1993 ஆம் ஆண்டில், நான் திருப்பரங்குன்றம் ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளராகப் பணியாற்றி வந்த நிலையில், தமிழ் நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சிலில் வழக்கறிஞராக ஜூன் மாதம் 28-ஆம் தேதி பதிவுசெய்தேன். அன்றைய தினம், முத்தமிழறிஞர் கலைஞரிடம் வாழ்த்துப் பெறுவதற்காக அண்ணா அறிவாலயத்துக்கு, அப்போது எங்கள் ஒன்றியச் செயலாளராக இருந்த அண்ணன் கோ.தளபதி அவர்கள் அழைத்துச்சென்றார். தலைவரிடம் பொன்னாடை அளித்து, வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம்.

- க.அழகுசுந்தரம், வழக்கறிஞர், திருப்பரங்குன்றம், மதுரை மாநகர் மாவட்டம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

நச்சுப்பாம்புகளுக்கு ஈடுகொடுக்கும் வல்லமை!



ஓவியம் : ரவி பேலட்

79

கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

1976-ஆம் ஆண்டில், கழகத்தின் ஆட்சியைக் கலைத்ததும், அதனைத் தொடர்ந்து சர்க்காரியா கமிஷன் என்கிற சூழ்ச்சிக்கும் பின்னால் இருந்த காரணங்களில் முதன்மையானது, கழகத்தை அழிக்க வேண்டும் என்பதுதான். அதற்கு அவர்கள் கையில் எடுத்த வழி - அவதூறுகள், பழிகள், ஆதாரமற்ற பொய்கள். மாநில உரிமைகளுக்கு உறுதியோடு குரல்கொடுக்கும் தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என்கிற மாபெரும் சூழ்ச்சிதான், எம்.ஜி.ஆர். தொடங்கிய தனிக்கட்சி என்பதை கலைஞர் பல நேரங்களில் விளக்கி இருக்கிறார். அந்த சூழ்ச்சியில், கழகத்தின் முன்னோடிகள் பலர் சிக்குண்டு வீழ்த்தப்பட்டனர். அப்படி சிக்காதவர்கள் மீதும் கலைஞர் மீதும் தான் அடுக்கடுக்கான புகார்கள், அவதூறுகள் சுமத்தினார், எம்.ஜி.ஆர். இறுதியாக, மிசா நெருக்கடி காலத்தில் அதை எதிர்த்த மாநில ஆட்சியாகவும் முக்கிய அரசியல் தலைவராகவும் இருந்தார் கலைஞர். அந்த நேரத்தில், வடமாநிலத் தலைவர்கள் பலருக்கும் தமிழ்நாட்டில் அடைக்கலம் கொடுத்தார் என்பதும் கழக ஆட்சிக் கலைப்புக்குக் காரணம்.

கழகம் ஆட்சியில் இருந்தபோது, கலைஞர் மீதும் கழகத்தினர் மீதும் அடுக்கடுக்கான அவதூறுகளை எம்.ஜி.ஆர். பரப்பி வந்தாலும், அந்தந்த நேரத்திலேயே அதற்குத் தகுந்த பதிலடி அளித்துக்கொண்டிருந்தார் கலைஞர். ஆனால், நெருக்கடி நிலை காலமோ, அவதூறுகளுக்குப் பதிலளிக்க முடியாத வகையில் கலைஞரை முடக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது.

ஆட்சியைக் கலைத்ததுடன், கழகத்தின்மீது அவதூறு பிரச்சாரத்தினையும் முன்னெடுத்திருந்த இந்திரா அம்மையார் அரசு, சர்க்காரியா கமிஷன் விசாரணை என்கிற பெயரில் நெருக்கடிகளையும் தொடங்கியது. இதன்மூலம் கழகத்தின்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை, மக்களிடம் கழகம் கொண்டிருந்த செல்வாக்கை அழிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். அவதூறுகளுக்குப் பதில் அளிக்க முடியாமல் கருத்துரிமை முடக்கப்பட்டதால், அவதூறுகளே கோலோச்சின. ஆனால், அந்த அவதூறுகளையே செய்திகளாக எந்தத் தணிக்கையுமில்லாமல் பக்கம் பக்கமாக வெளியிட்டுவந்தன, பல பத்திரிகைகள். *1976* மே மாதத்திலேயே 'எருக்கம்பூவில் இனிய மணம் நாடுவதோ?' எனக் கடிதம்வழி அவர்களின் நோக்கத்தை அம்பலப்படுத்தினார் கலைஞர்.

கொம்பேறி மூக்கனைப் போல

"கொம்பேறி மூக்கனைப்போல குணம் படைத்த ஏடுகள், கழகத்தைக் கடிக்கின்றன. கழகம் அழிந்துபோய்விட்டதா? என்ற ஆவலோடு, கொம்பில் ஏறி உற்றுப்பார்க்கின்றன. சுடலையில் எரிகின்ற எந்தப் பிணத்தையோ கண்டுவிட்டு, கழகம் சாம்பலாகிவிட்டது என்ற களிப்புடன் கீழே இறங்குகின்றன. அந்த நச்சுப்பாம்பின் பல்லுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய வல்லமை வாய்ந்த ரத்தம், கழகத்துக்கு உண்டு என்பதை அவை உணராத காரணத்தால், மரக்கொம்பை விட்டுக் கீழே இறங்கிவந்ததும், கழகம் கம்பீரமாக உலவிக்கொண்டிருப்பதைப் பார்த்துத் திகைக்கின்றன. மீண்டும் மீண்டும் தீண்டுகின்றன. மீண்டும் மீண்டும் மரக்கிளையில் ஏறிப்பார்க்கின்றன. 'மாண்டுவிட்டது என மகிழ்ந்தோமே.. அதற்கு மாறாக, கழகம் மகத்தான சக்தியாகவன்றோ வடிவெடுத்து நிற்கிறது' என மருள்கின்றனவென 'கொம்பேறி மூக்கன்' என்கிற பாம்பின் குணம் குறித்து சொல்லப்படும் கட்டுக்கதையை அன்றைய நாட்களுக்குப் பொருத்தினார்.

"சுட்டெரித்துப் பிடி சாம்பலாக்கி விட்டோம் கழகத்தை என்று கர்ச்சிப்பது, மறுநாள் கழகத்தின் பேருருவினைக் கண்டு சேறு, சகதியை அள்ளி வீசுவது."

''அவதூறு செய்திகள், ஆபாச அர்ச்சனைகள், புளுகு மூட்டைகள், பொய்த் தகவல்கள்" இவற்றையே மூலதனமாகக் கொண்டு கையொன்று செய்ய, விழியொன்று நாட, கருத்தொன்று எண்ண, பொய்யொன்றை வஞ்சக நாவொன்று பேச, நடமாடும் சில ஏடுகள், தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள இந்தப் போர் முறையால் கழகத்தைச் சாய்த்து விடலாம் எனக் கருதுகின்றன. பல பேர் முயன்று தோற்றுப்போன முறை அது" என்று அப்போது கழகம் சந்தித்த நெருக்கடியினை உடன்பிறப்புகளுக்கு உடனுக்குடன் உணர்வுபூர்வமாகப் பதிவுசெய்துள்ளார்.

குவிந்த மணியார்டர்கள்

அவதூறுகள் எவ்வளவு கீழ்மையாக இருக்கும் என்பதற்கான சான்றாக, 'சர்க்காரியா கமிஷன் வழக்கு நிதி திரட்டலைக் கூறலாம். விசாரணை கமிஷனை எதிர்கொள்ள கழகத்தின் சார்பில் தனி அலுவலகமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வழக்கு நிதி திரட்டும் அறிவிப்பினை *1976* ஏப்ரல் *24*-ஆம் தேதி, வேண்டுகோளாக விடுத்தார் கலைஞர். அதையடுத்து, அன்பகத்தில் மணியார்டர்கள் குவிந்தன. ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அளவில்கூட நிதி அனுப்பினர் தொண்டர்கள். நேரில் நிதி தருவதற்கு அன்பகத்துக்கும் கோபாலபுரத்துக்கும் படையெடுத்தனர். "கோபாலபுரம் தெரு கொள்ளாத கூட்டம்" என்கிறார் கலைஞர்.

வெளியூர்களில் இருந்து தனிப்பேருந்தில் படையெடுத்து வருவது, தாய்மார்கள், முதியோர், உடல்நலம் குன்றியோர், மாற்றுத்திறன் கொண்டோர் எனக் கழகக் கண்மணிகள் பல நூறு கிலோ மீட்டர் பயணித்து வந்து கொடுத்த தொகை, ஜூன் மாதம் *15*-ஆம் தேதிக்குள் ரூபாய் இரண்டு இலட்சத்தைத் தொட்டது. நிதி அளித்தோர் விவரங்களை ஒவ்வொரு நாளும் ஒரு பக்கம் முரசொலியில் வெளியிட்டார் கலைஞர். தொண்டர்கள் உயிரோடும் உணர்வோடும், ரத்த உறவாகவும் நினைத்து அளித்துவந்த அந்தத் தொகையை, 'கள்ளப்பணத்தை நல்ல பணமாக்கும் முயற்சி' என எழுதின, அன்று சில ஏடுகள். 'பிச்சைக்காரர்களிடம் கூலி கொடுத்து, அவர்களிடம் பணத்தையும் கொடுத்து, அதைப் பெற்றுக்கொள்கிறார்கள்' என்றும் அவதூறு செய்துள்ளனர்.

ஒரு நாளில், கலைஞரைக் காண வருகிறவர்கள் 'கேடு கெட்டவர்கள், சுரண்டல்காரர்கள்' என்று எழுதுவது, மற்றொரு நாளில், 'கலைஞரின் உடன்பிறப்பே கேள்' எனப் பொய்யை எழுதுவது, மற்றொரு நாளில், 'கலைஞர் சொந்தப் பிரச்சினையைச் சந்திக்கிறார், மனச்சாட்சி இல்லாதவர்' என எழுதுவது. இப்படி, கழகத்தினரை மடைமாற்றும் பணிகளையே தங்களின் ஒரே வேலையாகச் செய்துகொண்டிருந்தன அன்றைய ஏடுகள்.

'சென்னைக்குப் போகிறதுதான் போகிறோம், கலைஞர் இடிந்துபோய் உட்காந்திருக்கிறாரா? அல்லது தாக்குப்பிடிக்கிறாரா? பார்த்துவிட்டு வரலாம் என்கிற ஆவலால் உந்தப்பட்டவர்கள்தான், அவரைக் காண கூடுகின்றனர் என்றெல்லாம் எழுதின. இவற்றையெல்லாம் அவ்வப்போதே கலைஞர் கடிதங்களாக எழுதி இருப்பதால், அந்தக் காலகட்டத்தில் கழகம் சந்தித்த சோதனையை அறிந்துகொள்ள முடிகிறது. இவற்றுக்கு மத்தியில்தான், அந்த வழக்கினை எதிர்கொண்டு, 'நெருக்கடி நெருப்பாற்றில்' இருந்து புடம் போட்ட தங்கமாக வந்தது கழகம். வந்தார் கலைஞர்.

அன்று சுமத்தப்பட்ட ஆதாரமற்ற அந்த அவதூறுகளை எல்லாம் புறக்கணித்து, உறுதியுடன் நின்ற கழகத்தினருக்கு, "இவ்வளவு சங்கடங்களுக்கு இடையிலேயும் சலனமின்றி, சபலத்திற்கு இரையாகாமல், சந்தர்ப்பவாதிகளைப் புறக்கணித்துவிட்டு, கழகத்தைக் கட்டிக்காக்கும் உன் நிலைகுலையா நெஞ்சத்துக்கு என் வாழ்த்துகள் உரியதாகுக" என்று கலைஞர் கடிதம் எழுதினார்.

'எந்த ஆதாரமும் இல்லை' என நீதிபதி சர்க்காரியாவும், அதைக் காரணமாகக் கொண்டு தொடுக்கப்பட்ட வழக்குகள் கரைந்தும் காணாமலும் போனதுடன், குற்றம் சாட்டியவர்களும் அவர்களுக்குப் பின் வந்தவர்களும்கூட, அந்தப் புகார்களைத் தூசுதட்டினால் தோல்வியே மிச்சம் என்பதை அறிந்து, புதிய அவதூறுகளைப் பேசத் தொடங்கினர். இன்றும் ஆதாரங்கள் எதுவுமற்ற அந்த வழக்கில், அவதூறுகள் மட்டும் மிச்சமிருப்பதற்கும் அதை உயிர்ப்போடு வைத்திருப்பதற்கும் காரணம், கழகத்தின்மீது காழ்ப்பும் வெறுப்பும் அன்றி வேறில்லை; அதை எந்த நாளும் கழகத்தினர் முறியடிப்பர்.

...தொடரும்

தமிழ்.கா.அமுதரசன்

தெரிந்து கொள்வோம்

1957

தேர்தல் அறிக்கை!

-இல், திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலில் தேர்தலைச் சந்தித்தபோது வெளியிட்ட, கழகத்தின் முதல் தேர்தல் அறிக்கையைக் கழக முன்னோடி என்.வி.நடராசன் தலைமையிலான குழு தயாரித்தது. ஈ.வெ.கி.சம்பத், கே.ஏ.மதியழகன், கலைஞர், ஏ.கோவிந்தசாமி, ம.பி.சுப்பிரமணியம், சத்தியவாணி முத்து ஆகியோர் அந்தக் குழுவில் இடம்பெற்றனர். தேர்தலுக்கு முன்னர், ஜனவரி மாதம் 15-ஆம் தேதிக்குள் வெளியிடுமாறு பொதுக்குழு கூறியபடி, பேரறிஞர் அண்ணா தேர்தல் அறிக்கையினை வெளியிட்டார்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900